பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
23 11 2024 7 15
சனிக்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

- மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி கூட்டணி 154 தொகுதிகளில் வெற்றிபெற்று 73 தொகுதிகளில் முன்னிலை பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- ஜார்க்கண்ட்டில் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கவுள்ளது.
- விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு கூட்டுறவுத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் 116-வது மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் பேருந்து போக்குவரத்தை மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார் இன்று லடாக்கில் தொடங்கி வைத்தார்.
- ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான இன்று, இந்தியா ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 172 ரன் எடுத்துள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

[]<<<>>>[]

சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்ற மகாராஷ்டிராவில் பிஜேபி தலைமையிலான கூட்டணியும், ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி மீண்டும் ஆட்சியை பிடிக்கும் நிலையில் உள்ளன.

மகாராஷ்ட்ராவில் மொத்தம் உள்ள 288 தொகுதிகளில் பிஜேபி கூட்டணி -154--- தொகுதிகளில் வெற்றிபெற்று -73- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

பிஜேபி 84-- தொகுதிகளில் வெற்றிபெற்று -49-- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவ்சேனா -40- தொகுதிகளில் வெற்றிபெற்று -17- தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் -34 தொகுதிகளில் வெற்றிபெற்று -7- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

காங்கிரஸ் கூட்டணி -34-- தொகுதிகளில் வெற்றிபெற்று -13- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

காங்கிரஸ் கட்சி -10- தொகுதிகளில் வெற்றிபெற்று -5- தொகுதிகளில் யில் முன்னிலையில் உள்ளன.

அதன் கூட்டணி கட்சியான சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் -6- தொகுதிகளில் வெற்றிபெற்று -4- தொகுதியில் முன்னிலை வகிக்கிறது.

சமாஜ்வாதி கட்சி இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ்சேனா -16- தொகுதிகளில் வெற்றிபெற்று -4- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

[]<<<>>>[]

81 உறுப்பினர்களை கொண்ட ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில்,

ஆளும் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா -33-- தொகுதிகளில் வெற்றிபெற்று -3- தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

அதன் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் -16- தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

ராஷ்ட்ரிய ஜனதாதள் -4- தொகுதிகளில் வெற்றிபெற்று மூன்று தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது.

பிஜேபி -22- தொகுதிகளில் வெற்றிபெற்று -3- தொகுதியில் முன்னிலை வகிக்கிகறது.

[]<<<>>>[]

வயநாடு மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் திருமதி பிரியங்கா காந்தி ஆறு லட்சத்து 22 ஆயிரத்துக்கும் கூடுதலான வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

தமக்கு அடுத்தப்படியாக வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் திரு சத்யன் Mokery-யை விட நான்கு லட்சத்திற்கும் கூடுதலான வாக்குகளை பெற்றுள்ளார்.

[]<<<>>>[]

மகாராஷ்ட்ரா மாநிலம் Nanded மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் டாக்டர் Santukrao Marotrao Hambarde, முன்னிலையில் உள்ளார்.

அவர் தமக்கு அடுத்தபடியாக வந்த காங்கிரஸ் வேட்பாளர் திரு Chavan Ravindra Vasanth Rao –வை விட மூன்று லட்சத்திற்கும் கூடுதலாக வாக்குகள் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

[]<<<>>>[]

உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட 13 மாநிலங்களுக்கு உட்பட்ட 46 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளும் இன்று எண்ணப்பட்டன.

ராஜஸ்தானில் ஏழு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், பிஜேபி ஐந்து தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

பாரத் ஆதிவாசி கட்சி ஒரு இடத்தில் வெற்றிபெற்றுள்ளது. மற்றொரு தொகுதியில் மறு வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது.

மேற்குவங்கத்தில் ஆறு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

பீகாரில் நான்கு தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

பஞ்சாபில் நான்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி மூன்று இடங்களிலும், காங்கிரஸ் ஒரு இடத்திலும் வெற்றிபெற்றுள்ளது.

சத்திஷ்கரில் ராய்பூர் தொகுதியில் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது.

கர்நாடகாவில் இடைத்தேர்தல் நடைபெற்ற மூன்று தொகுதிகளிலும் காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

மேகாலயாவில் ஒரு தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தேசிய மக்கள் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

உத்தரகாண்டின் கேதர்நாத் தொகுதியை பிஜேபி கைப்பற்றியுள்ளது.

கேரளாவில் காங்கிரஸ் ஒரு இடத்திலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒரு இடத்திலும் வெற்றிபெற்றுள்ளன.

குஜராத்தில் ஒரு தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது.

அஸ்ஸாமில் ஐந்து தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பிஜேபி ஒரு இடத்திலும், ஐக்கிய மக்கள் கட்சி ஒரு இடத்திலும், அஸ்ஸாம் கன பரிஷத் ஒரு இடத்திலும் வெற்றிபெற்றுள்ளன.

உத்திரபிரதேசத்தில் ஒன்பது சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் மூன்று இடங்களில் வெற்றிபெற்று மேலும் மூன்று இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது.

அதன் கூட்டணி கட்சியான ராஷ்ட்ரீய லோக்தள் ஒரு இடத்தில் முன்னிலை வகிக்கிறது.

சமாஜ்வாதி கட்சி இரண்டு இடங்களை வென்றுள்ளது.

மத்திய பிரதேசத்தில் விஜய்பூரில் காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. மற்றொரு இடத்தில் பிஜேபி முன்னிலை வகிக்கிறது.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் 116-வது மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

[]<<<>>>[]

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு கூட்டுறவுத் துறை மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் 91-வது பொது சபைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கூட்டுறவு இயக்கத்தின் மூலம் மக்களிடையே நேர்மறையான மாற்றங்களை கொண்டு வருவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

சுயசார்பு இந்தியாவை உருவாக்க பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு கூட்டுறவுத்துறை மூலம் பல திட்டங்களை செயல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள லட்சக்கணக்கான கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துவதற்கு தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய அவர், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இக்கழகத்தின் மூலம் 60 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அனைத்து கூட்டுறவு சங்கங்களையும் கணினி கட்டமைப்பில் இணைப்பதற்கான நடவடிக்கைகளை தேசிய கழகம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்க்கரை ஆலைகளின் நிதி நிலையை மேம்படுத்துவதற்கு ஐந்து ஆண்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகக் கூறிய திரு அமித்ஷா, அதற்கான நிதியை 25 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடியின் சீரிய முயற்சியால் கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய நினைவுச் சின்ன ஆணையத்தின் 14-வது நிறுவன நாள் விழாவில் பேசிய அவர், நாட்டின் பாரம்பரியத்தை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்லும் வகையில் பழம்பெருமை மிக்க நினைவுச் சின்னங்களை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்று கூறினார்.

சீர்மிகு கலாச்சார அடையாளம் காரணமாக இந்தியாவுக்கு உலகம் முழுவதிலும் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், யோகாசனம், சிற்பக்கலை போன்றவைகளுக்கும் உலக அளவில் பெரும் வரவேற்பு இருப்பதாகக் கூறினர்.

அரிய நினைவுச் சின்னங்களை பன்னெடுங்காலமாக பாதுகாத்து வரும் தேசிய நினைவுச் சின்ன ஆணையத்தின் பணிகளை பாராட்டுவதாகவும் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் பேருந்து போக்குவரத்தை மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார் இன்று லடாக்கில் தொடங்கி வைத்தார்.

தேசிய அனல் மின் கழகத்தின் மூலம் இயக்கப்படும் இந்த பசுமை ஹைட்ரஜன் பேருந்துகளுக்குத் தேவையான ஹைட்ரஜனை நிரப்புவதற்கான நிலையங்களும் போதிய அளவில் லடாக்கில் அமைக்கப்பட்டுள்ளன.

25 கிலோ ஹைட்ரஜன் நிரப்பப்பட்ட பேருந்து 300 கிலோமீட்டர் தூரம் பயணிக்க இயலும்.

பசுமை ஹைட்ரஜன் பேருந்துகளை இயக்குவதன் மூலம் புகையினால் ஏற்படும் மாசுவை ஆண்டுக்கு 350 டன் அளவுக்கு குறைக்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹைட்ரஜன் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்த பின் அந்த பேருந்தில் அமைச்சர் திரு மனோகர்லால் கட்டார் 12 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்தார்.

இந்த பேருந்தை வடிவமைத்த அனல் மின் கழகத்துக்கு தமது பாராட்டுக்களையும் அமைச்சர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் நாளான இன்று, இந்தியா இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பின்றி 172 ரன் எடுத்துள்ளது.

ஜெய்ஸ்வால் 90 ரன்னுடனும், கே எல் ராகுல் 62 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது இந்திய அணி 218 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

பெர்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 67 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா, 104 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பும்ரா அபாரமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 150 ரன்.

[]<<<>>>[]

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் அரை இறுதி ஆட்டத்தில் சிராக் ஷெட்டி – ரெங்கி ரெட்டி இணை இன்று மாலை தென் கொரிய இணையை எதிர்கொள்கிறது.

*End of News*